1982 மார்ச் 1]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, இந்த முடிவை மேற்கொண்டது மாநில அரசு அல்ல. நெசவாளர்களுக்கு குறைந்த வட்டியில் கடன் வழங்க வேண்டும் என்பதில் இந்த அரசு அக்கறை கொண்டிருக்கிறது. மேலும் இந்த நலிந்த பிரிவினருக்கு குறைந்த வட்டியில் கடன் வழங்க வேண்டியவர்கள் மத்திய அரசும் ரிசர்வ் வங்கியும் தான். அவர்களே இது பற்றி பரிசீலனை செய்து ஒரு சதவீதம் உயர்வை மத்திய அரசு அனுமதியின் பேரில் ரிசர்வ் வங்கி விதித்திருக்கிறது. இது நலிந்த நிலையில் இருக்கின்ற நெசவாளர்களைப் பாதிக்கும் என்பதை இந்த அரசு உணருகிறது. இருந்தாலும் ரிசர்வ் வங்கியின் உத்தரவை நாம் நிறைவேற்ற வேண்டியிருப்பதால் இதை நம்மால் தவிர்க்க முடியாது. வேண்டுமானால் மாநில அரசு இந்த உயர்வைக் குறைக்க மத்திய அரசுக்கும் ரிசர்வ் வங்கிக்கும் எழுதும்.

திரு. இரா. கருப்பையா : தலைவரவர்களே, இந்த நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உற்பத்திச் செய்யக் கூடிய துணிகளை, சரக்குகளை மாநில கூட்டுறவுச் சம்மேளனம் (கோ-ஆப்டெக்ஸ்) அடக்க விலையில் 9 சதவிகிதம் சேர்த்துதான் கொள்முதல் செய்கிறது. இப்போது வட்டி $10\frac{1}{2}$ சதவீதமாக உயர்ந்திருக்கிறது. அதிலும் குறிப்பாக ஏற்கெனவே விற்ற சரக்குகளுக்கு எல்லாம் ஜூலை மாதம் 12-ந் தேதியிலிருந்து இந்த வட்டியை ஈடு செய்ய வேண்டியிருக்கிறது ; முன் தேதியிட்டு வட்டியை வசூல் செய்கிறார்கள். ஆகையால் இந்தச் சங்கங்களுக்கு இதனால் ஏற்படும் இழப்பை ஈடு செய்ய மாநில அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, $10\frac{1}{2}$ சதவீதம் என்ற உயர்வு இருந்தபோதிலும் ''சப்சிடி'' இருக்கிற காரணத்தால் $6\frac{1}{2}$ சதவீதத்திலிருந்து $7\frac{1}{2}$ சதவீதத்திற்குதான் உயர்வு செய்யப்பட்டிருக்கிறது. ரிசர்வ் வங்கி அந்தத் தேதியில் இருந்து வட்டி உயர்வுக்கு வகை செய்து, உத்தரவு பிறப்பித்து இருப்பதால் அந்த உத்தரவை மீறுகிற அதிகாரம் நமக்கு இல்லை. அதனால் அது அந்தத் தேதியிலிருந்து நடைமுறைக்கு வந்திருக்கிறது.

ஸ்ரீபெரும்புதூர் தொகுதிக்கான பாலாற்றுக் குடிநீர் திட்டம்.

*வினா எண் 291—திருமதி டி. யசோதா : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாலாற்று குடிநீர் திட்டம் மூலம் ஸ்ரீபெரும்புதூர் தொகுதி பகுதிகளுக்கு எப்போது தண்ணீர் அளிக்கப்படும் ?

(ஆ) காலதாமதத்திற்கு காரணம் என்ன ?

[1982 மார்ச் 1

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஸ்ரீபெரும்புதூர் பேரூராட்சி மற்றும் ஸ்ரீபெரும்புதூர், வாலாஜாபாத் ஒன்றியங்களில் உள்ள 21 குடியிருப்புகளுக்கும் பாலாற்றைத் தலைப்பிடமாகக் கொண்டு குடிநீர் வழங்க ஒரு ஒருங்கிணைந்த குடிநீர் திட்டம் தற்பொழுது அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) ஸ்ரீபெரும்புதூர் பேரூராட்சி தனது பங்குத் தொகையை ஏற்க ஒப்புதல் அளிப்பதில் காலதாமதமாயிற்று. தற்பொழுது திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திருமதி டி. யசோதா : மாண்புமிகு தலைவரவர்களே, ஏற்பட்ட காலதாமதத்தைப் போக்க, இனிமேல் எவ்வளவு விரைவில் அந்தத் திட்டம் அந்த மக்களுக்கு கிடைக்கும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மிக விரைவில் ஒப்புதல் அளிக்கப்படும்.

பணியில் இருக்கும்போது இறந்துவிடும் தொழிலாளியின் ஈமச் சடங்கிற்கான நிதி உதவி.

*வினா எண் 292—திரு. செ. செம்மலை : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பணியில் இருக்கும்போது இறந்துவிடும் தொழிலாளியின் ஈமச்சடங்கிற்காக அவரது வாரிசுதாரருக்கு தொழிலாளர் நல வாரியம் உதவித் தொகை வழங்கி வருகிறதா ?

(ஆ) ஆம் எனில், வழங்கப்படும் தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) ஒரு தொழிலாளிக்கு ரூபாய் 200 வீதம் தரப்படுகின்றது.

திரு. செ. செம்மலை : தலைவரவர்களே, எந்த ஆண்டிலிருந்து இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது என்ற விவரத்தையும் இந்தக் காரியங்களுக்கு இந்தத் தொழிலாளர் நல வாரியம் இதுவரை எவ்வளவு தொகை வழங்கி இருக்கின்றது என்பதையும் அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS